பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

13 MAR 2001
மாநகராட்சி நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 28 திங்கட்கிழமை 12-03-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 83

மங்கையரின் அழகுக்கு
மேலும் அழகூட்டும்
தங்க நகைகளை 22கரட்டில்
பெற்றிட இன்றே நாடுங்கள்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1574)

## ★ சமாதானப் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வருவதே எமது பொறுப்பு

# அரசும் - புலிகளும் பேசி ஓர் முடிவுக்கு வரவேண்டும்

## நோர்வேத்தூதுவர் வெஸ்பேர்க் பேட்டி

(நமது நிருபர்)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே, இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுவருகிறது. இனப்பிரச்சினை தொடர்பான தீர்மானம் எடுப்பதில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளுமே சம்மந்தப்பட்டிருப்பார்கள் இதில் எந்தத் தீர்வையும் நோர்வே அரசு திணிக்கமாட்டாதென்று நோர்வேத்தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே அரசின் தூதுவர் வெஸ்பேர்க் சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது'

கடந்த இரண்டு தசாப்த்த மாகஇழுபறிநிலையில்இருந்து வரும் இனப்பிரச்சினையினால் ஏற்பட்டுவரும் உயிர். உடமை இழப்புக்களைத் தவிர்ப்பதற்காகஇலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமார

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வரவுசெலவுதிட்ட விவாதம இன்று

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஏழாவது வரவுசெலவுத் திட்ட விவாதம் இன்று பாராளுமன்றத்தில் ஆரமபமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கரு ஜெயசூரியா விவாதத்தை ஆரம்பித்து வைப்பார். அரசாங்க தரப்பில் புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விவாத உரையை ஆரம்பித்து வைப்பாரென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## ★ சர்வ மதக்குழு மருவுக்கு வருவது பற்றி தெரியாதென்கிறார் ஆயர்

(மன்னார்)

இலங்கை அரசின் நல்லெண்ண செய்தியுடன் சர்வ மத குழு மடுவிற்கு வருவது தொடர்பாக எந்த விதமான தகவலும் தனக்குக் கிடைக்கவில்லை என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் வலம்புரிச் செய்தியாளருக்குத் தெரிவித்துள்ளார்.

அரசின் செய்தியுடன் சர்வ மதக்குழு மடுவுக்கு வருவது தொடர்பாக எமது செய்தியாளர் ஆயருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வமதக்குழு படுவுக்கு வரவிருப்பது தொடர்பாக தனக்கு எவரும் அறிவிக்கவில்லை என்றும், இது தொடர்பாக எனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிய மறைமாவட்ட ஆயர் நேற்று இந்தியாவுக்கு புறப்

→8 ஆம் பக்கம் பார்க்க

## வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதில் ரணில் தீவிர முயற்சி

[கொழும்பு]

அரசினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏழாவது வரவுசெலவுத்திட்டத்தை தோற்கடிக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக்கட்சி முனைப்பாகச் செயற்பட்டு வருகிறது:

ஜே. வி. பி. உட்பட அனைத்து கட்சிகளின்ஆதரவுடன் இதனைச் சாதிக்க ரணில்விக்கிரமசிங்கா அக்கட்சியினருடன் பேச்சுநடத்தி வருகிறார்.

இதேவேளை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ரெலோ ஆகியனவும் வரவு செலவுத்திட்டத்தை எதிர்ப்பதென முடிவு செய்துள்ளமை தெரிந்ததே: [வ

## வரவு செலவு திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

### அரச,தனியார் சங்கங்கள் ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கம் தற்போது சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத் திட்டத்தில் தமக்கு எதுவித நிவாரணங்களோ, சலுகைகளோ அளிக்கப்படாமைக்குஎதிர்ப்புத் தெரிவித்து அரச ஊழியர்கள் சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டு வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக நாளை மறுதினம் புதன் கிழமை ஒன்று கூடி இறுதி முடிவு எடுத்து ஆர்ப்பாட்டப் போரட்டத்தில் குதிக்கவுள்ளனர். (வ)

## பிரதமரின் மகன் பதவி விலகுவார்

[கொழும்வு]

பிரதமமந்திரி ரட்ணஸ்ரீவிக்கிரமநாயக்காவுக்கும் அவரது மகன்விதுர விக்கிரமநாயக்காவுக்குமிடையில் உருவான மனக்கசப்பை யடுத்து புத்தசாசனஅமைச்சின் இணைப்புச் செயலாளர் பதவியை விதுர விக்கிரமநாயக்க இராஜினாமாச்செய்துள்ளார்.

புத்தசாசன அமைச்சின் இணைப்புச் செயலாளரான விதுர ,பிரதமரின்இணைப்புச் செயலாளராகவும் அதிகாரம் செலுத்துகிறாரென பத்திரிகையொன்று விமர்சனம் செய்திருந்தது·இதனையடுத்து பிரதமர் தனதுமகன் விதுரவை எச்சரிக்கை செய்திருந்தார்.

இதன்காரணமாக எழுந்த மனக்கசப்பையடுத்து விதுர பதவி விலகவுள்ளதாகத் தெரியவருகிறது. (இ)

## மகாலிங்கம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

உடுவில், நல்லூர் பிரதேச செயலரும், இந்து சமயப் பேரவையின் உபதலைவருமான ஆ. மகாலிங்கம் நேற்று காலமானார்? அவருக்கு வயது 60:

குப்பிளான் விக்னேஸ்வரா, சுன்னாகம் ஸ்கந்தவரோதய

→8ஆம் பக்கம்பார்க்

## 2050ம் ஆண்டில் உலக சனத்தொகை950கோடி

2050ம் ஆண்டில் உலக சனத்தொகை 950 கோடிக்கு மேலாக இருக்குமென ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் மக்களின் ஆயுட்காலம் 2050ம் ஆண்டில் 82 வருடங்களாகவும் வளர்முக நாடுகளில் 75 வருடங்களாகவும் இருக்கும் என்றும் அக்கணிப்பீடு தெரிவித்துள் (8ம் பக்கம் பார்க்க)

## சைவத் தமிழ் மக்களுக்கு அரும் பணியாற்றியவர்

### நல்லை ஆதீன முதல்வர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

இந்துமத எழுச்சிக்காக அல்லும் பகலும் தியாகத்துடன் உழைத்துவந்த இந்து சமயப் பேரவையின் உப தலைவர் ஆ. மகாலிங்கம் அவர்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும்.

இந்துசமயப் பேரவையின் உபதலைவர் ஆ. மகாலிங்கத்தின் மறைவு குறித்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்யசுவாமிகள் விடுத்தஇரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் சுவாமிகள் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அன்னாரின் அர்ப்பணிப்புடன் கூடிய சமய சமூகப் பணிகளை உலகம் என்றும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இன்றைய சோதனை மிக்க சூழ்நிலையில் அன்னாரின் இழப்பு சைவத்தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும். (வ)

## 400 ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கையை அரசு சாதகமாக தீர்க்காவிட்டால் பாராளுமன்றை பகிஷ்கரிப்போம்

(கொழும்பு)

400 ரூபா சம்பள உயர்வு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் சாதகமான முறையில் தீர்வுகாணாவிட்டால் ஈ.பி.டி.பி எம்பிகள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க வேண்டி வரும்:

இவ்வாறு சம்பள உயர்வு கோரிசத்தியாக்கிரகப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன மலையகத் தொழிளலார் களுக்கு ஆதரவு தெரிவித்து ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் நேற்று சத்தியாக்கிரகம் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

சத்தியாக் கிரகப் போராட்டம் இன்று 22 வது நளாக தொடர்கிறது (வ)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கோண்டாவில் நவரட்ண ராஜா வீதியில் வசிக்கும் வாமதேவன் சுஜித்தா என்பவருடைய தெல்லிப்பழை கிழக்கு விலாசத்துடன் தே. அ அட்டை இல 817662528V மற்றும் விசேட அடையாள அட்டை பாடசாலை அடையாள அட்டைஎன்பனநல்லூர் பலநோக்கு கூ. சங்கத்திற்கும் கோண்டாவில் ஆசிமட விநாயகர் ஆலயத்திற்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லூர் ப. நோ. கூ. சங்க கிளையில் அல்லது வங்கியில் ஒப்படைக்கவும். கி 1587

### உர ஆலை திறப்பு

(கொழும்பு)

இரசாயன உரத்தையும் உயிரியல் வாயுவையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று பலாங்கொடயில் திறக்கப்பட்டுள்ளது

39 இலட்சம் ரூபா முதலீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையின் மூலம் உர உற்பத்தியிலும் உயிரியல் வாயு உற்பத்தியிலும் நாட்டில் . குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சால் கற்கு நிலை மாணவ பெண்தாதிய உத்தியோகத்தர்களை 2001 ஆம் ஆண்டு ஆட் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறி 3 வருடங்கள் கொண்டதாகும். 1.6 2001ல் இப்பயிற்சி யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி மூலம் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்த பெண்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர் 18 வயதுக்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட திருமணமாகாதவராயும் இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 15.3.2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-111)

### இயங்காத நூலகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் உள்ள புனிதயோசப் ஆலய நூலகம் கடந்தபத்து வருடங்களுக்கு மேலாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

ஊர்காவற்றுறையில் உள்ள மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் பயன்பெற்று வந்த இவ்நூலகம் கூரையின்றிக் வெறுந்தோற்றமாக காட்சியளிக்கிறது.

இவ் நூலகத்தினை திருத்தி மீண்டும் இயங்க வைக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ75)

## நல்லதண்ணித் தொருவாயில் போர் நடவடிக்கைகளால்

# 300 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

(வவுனியா)

வன்னிப் பெரு நிலப்பரப்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் சுண்டிக்குளம் நல்லதண்ணித் தொடுவாய் கரையோரக் கிராமத்தில் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாகியும் அழிந்தும் காணப்படுகின்றன.

விமானப்படையினரின் தாக்குதல் மற்றும் கடற்படையினரின் தாக்குதல்களில இவை சேதமடைந்துள்ளன.

ஆரம்பத்தில் இக்கிராமத்தில் 320 குடியிருப்புக்கள் இருந்த போதிலும் 20 குடியிருப்புக்களே தற்போது அழிவின்றி எஞ்சியுள்ளன.

இருப்பினும், தற்காலிக குடியிருப்புக்கள் அமைத்து தற்போது 300 குடும்பங்கள் இங்கு வசித்து வருகின்றன.

இதுதவிர கடந்தகால போர் நடவடிக்கைகளால் இப்பகுதியில் உள்ள 7 குடும்பங்கள் தமது குடும்பத்தலைவரை இழந்துள்ளன.

9 பேர் மரணமடைந்து, 13 பேர் காயமடைந்தும் உள்ளனர். (உ)

## மக்கள் வசிப்பிடங்களில் மாட்டு இறைச்சிக்கடை பொதுமக்கள் ஆவேசம்

(கோப்பாய்)

கோப்பாய் சந்திக்கு அண்மையில் உள்ள சந்தைக் கட்டடத்தில் இயங்கி வந்த மாட்டிறைச்சிக்கடை தற்போது மானிப்பாய் வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கிவருவது குறித்து அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்கள் நெருக்கமாக வசிக்கும் பகுதிகளில் இத்தகைய கடைகள் இயங்குவது சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இடத்தில் இறைச்சி வியாபாரம் அபரிதமாக நடப்பதாக வியாபாரிகள் தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைமேற்கொள்ள வேண்டுமெனபொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [க-79]

## வவுனியாவில்வசித்துவரும் 82 குடும்பங்கள் யாழில் மீளக் குடியேற்றம்

(வவுனியா)

யாழ்.குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் வசித்து வருகின்ற 82 குடும்பங்களைச் சேர்ந்த 162 பேர் கட்டம் கட்டமாக சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

வடக்கு புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருவதுடன் பயண ஏற்பாடுகளை அனைத்தையும் வவுனியா செயலகம்மேற்கொள்ளுமென அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சொந்த இடங்களில் மீண்டும் இயல்புவாழ்க்கைக்கு திரும்பும்வரை சகல உதவிகளும் வழங்கப்படும்

வவுனியா மன்னார் ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேற விரும்புபவர்கள் அந்தந்த மாவட்ட செயலகங்களில் பதிவு செய்யுமாறும் அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## தீவக கல்வி வலயத் தடகளப் போட்டிகள்

(ஊர்காவற்றுறை)

தீவக கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் தீவக வலய கல்வி அபிவிருத்திக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் பேட்டிப் பணிப்பாளரும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகருமான எஸ். என். லோகநாதன் நெறிப்படுத்தலில் இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு கோட்டப் பாடசாலை மாணவர்கள் இத்தடகள மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றுவார்கள்.

இப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் வீர வீராங்கனைகளே மாவட்ட மட்ட தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை பெற்றுக் கொள்வர். (உ-75)

## பாடசாலை கொடிகளுடன் வீதிகளில் கிரிக்கெட் ரசிகர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் பாடசாலைகளுக்கிடையிலான 'கிரிக்கெட்' போட்டிகள் தற்சமயம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

கிரிக்கெட் ரசிகர்களால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும்யாழ். சென் ஜோன்ஸ் யாழ். மத்திய கல்லூரிக்கிடையிலான 'கிரிக்கெட்' போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதால் தத்தமது பாடசாலைகளுக்கு ஆதரவு தேடுமுகமாக யாழ். நகர வீதிப் பகுதிகளில் இரசிகர்கள் பாடசாலைக் கொடிகளுடன் கோஷமிட்டவாறு பயணம் செய்வதை அவதானிக்கமுடிகிறது. (க-15)

## தேங்காய் பிடுங்க மரத்தில்ஏறியபெண்மரணம்

[கொழும்பு]

தென்னை மரங்களில் ஏறி தேங்காய் பிடுங்கும் தொழிவில் ஈடுபட்டு வந்த குடும்பப் பெண் மரத்தில் இருந்து வீழ்ந்து மரணமடைந்தாள்.

தெஹியோவிட்ட எனும் இடத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின்தாயான மேற்படி பெண் வறுமை காரணமாக கடந்த 10 வருடங்களாக தேங்காய் பிடுங்கும் தொழிலில் ஈடுபட்டுவந்ததாகவும்,

சம்பவதினம் 42 அடி உயர மரத்தில் தேங்காய் பிடுங்கிக் கொண்டிருந்த வேளை தவறி வீழ்ந்து மரணமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## வீதிகள் எங்கும் அலையும் மாடுகள்

தென்மராட்சி பகுதியின் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி, மீசாலை, சங்கத்தானைப் பகுதிகளில் மாடுகள் அநாதரவாக உலாவிவருவதாக அப்பகுதிக்கு சென்று வந்தோர்தெரிவித்துள்ளனர்.

வீதிகள் எங்கும் புகைப் படங்கள், வீடியோகசெட்டுக்கள், பாவனைப் பொருட்கள் பரவிக்கிடப்பதாகவும் வர்த்தக நிலையங்கள் யாவும் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-111)

## மேல் மாகாணத்திற்கு இடம் மாற்றம் பெறும் 49 ஆசிரியர் விபரம்

[யாழ்ப்பாணம்]

வட-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு மேல்மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தில் இருந்து மேல் மாகாணத்திற்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்களில் 80 ஆசிரியர்களை தாம் ஏற்றுக் கொள்வதாக மேல் மாகாண சபை பொ. சே. ஆணைக்குழுவின் செயலாளர் டி. ஆர்.சுபசிங்க வட-கிழக்கு மாகாண பொ. சே. ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இவ் 80 ஆசிரியர்களில் 49 ஆசிரியர்கள் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகும். இடமாற்றத்திற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் எதிர் வரும் 19.03 2001 முன் மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தங்களுக்குரிய இடமாற்றம் பெறும் பாடசாலைகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இத்திகதிக்கு முன் கடமையைப் பொறுப்பேற்க முடியாதவர்கள் அதற்கான காரணத்தை மேல்மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்து அதன் ஒரு பிரதியை சி. சரவணபவானந்தன் (நிர்வாகச் செயலாளர்) இ. த. ஆ. சங்கம் ''கனடா இல்லம்'' 40, மத்திய வீதி, கொழும்பு-15 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இ. த. ஆ. சங்கத்தின் சி. து பொ.செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

விபரம் வருமாறு; திருமதி கே. சந்திரகுமார், யா-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

வை. தில்லைநாதன் யா-முத்துத்தம்பி ம. வி.

ரி. ரட்ணகுமார்யா-ஹாட்லிக் கல்லூரி

திருமதி எஸ். ரட்ணகுமார் யா-மெதடிஸ்த மிஷன்உ. த. பா.

திருமதி ஞானசேகரம் பிள்ளை யா-ஹட்லிக் கல்லூரி

எஸ். வரதன் யா-உடுவில் முருகமூர்த்தி வித்தி

திருமதி கே. எஸ். இந்துசிங்கம் யா-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

திருமதி பத்மஜாலோகநாதன் யா-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

திருமதிஎன். மோகனதாஸ் யா-வீமன்காமம் ம. வி.

வி. ஏ. ராமச்சந்திரன் கோட்டக்கல்விப் பணிமனை வலிகாமம்

எஸ். கே. சண்முகலிங்கம் யா-புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தி

திருமதி கே. பரமகுரு யா-நீர்வேலி றோ க. த.

திருமதி எஸ். ஜே. ஜெயக்குமார் யா-புனித சாள்ஸ ம. வி.

திருமதி பி. சபாநாதன் யா-கொழும்புத்துறை புனித ஜேம்ஸ் வித்தி

திருமதி ஆர். சிறிதரன் யா-கொக்குவில் இந்துக் கல்லூரி

எஸ். உமாபதிசிவம் யா-கன்னியர் மடம் ம. வி.

எஸ். குணசீலன் யா-அல்லாரை அ. த. க. வித்தி

செல்வி யூ. ஆர். இராசேந்திரம் புங்குடுதீவு ம. வி

பி. கிருபாகரன் யா-புனித ஜேம்ஸ் மகளிர் வித்தி

திருமதி வி. இராமநாதன் யா-வட்டு திருநாவுக்கரசு ம. வித்தி

ப. தனபாலசுந்தரம் யா-முத்துத்தம்பி ம. வித்தி

திருமதி எம். அருமைநாயகம் யா- கனகரத்தினம் ம. ம.வி.

ஆ. மோகனசுந்தரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

இ. தவபாலன் கனகரத்தினம ம.ம.வி.

த. சிவகுமாரன்கோண்டாவில்பரஞ்சோதி வித்தி

திருமதி சி. ஆனந்தன் வடமராட்சி இ.ம. கல்லூரி

திருமதி ஜெ கனககேந்திரன் அச்செழுசைவப்பிரகாசவித்தி

செல்வி. க. செல்வமாணிக்கம் வசாவிளான் ம.ம.வி.

திருமதி கா. புவனேஸ்வரன் சோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

திருமதி க. நவரத்தின ராஜாநல்லூர் தெற்குஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தி.

திருமதி கா. யோகதாசன் அரியாலை ஸ்ரீபார்வதிவித்தி.

திருமதி க. குணசீலன் வீரசிங்கம் ம. வித்தி

திருமதி சா. பரமலிங்கம் வீரசிங்கம் ம. வித்தி.

திருமதி சோ. பரம்சோதி வீரசிங்கம் ம. வித்தி

திருமதி நே. செல்வேஸ்வரன் கைதடி நுணாவில் அ.த. க. பாடசாலை.

செல்வி. அ. வடிவேலு உசன் இராமநாதன் ம.வி.

அருட்சகோதரிஜெ றொட்ரிக்கோ நெடுந்தீவு றோ.க. வித்தி.

திருமதிச. ஜோர்ஜ் பாஷையூர் சென். அன்ரனீஸ் பெண்கள் பாடசாலை

திருமதி செ. பத்மநாதன் கொட்டடி நமசிவாய வித்தி.

திருமதி பே. சதானந்தசிவம் வட்டு இநதுக் கல்லூரி

திருமதி த. ஜெயசீலன்யூனியன் கல்லூரி

திருமதி நளினி சாந்தி இராமநாதன் கல்லூரி

திருமதி. கு. சிவனேஸ்வரன் இராமநாதன் கல்லூரி

திருமதி ப. ஜேசுதாசன் கன்னியர் மடம் ம. வித்தி

திருமதி எம். ரி. தங்கநாயகம் சென் ஜோசப் வித்தி

திருமதி ச. இராஜரெத்தினம் புனித சாள்ஸ் ம. வி

திருமதி க. நாகராசா யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

திருமதி ப. கேதீஸ்வரநாதன் புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

திருமதி கோ. இராமச்சந்திரன் உடுவில் மான்ஸ் த.க. பாடசாலை.

# போர் முடிவுக்கு வராதென்பதை புதிய பட்ஜெட் எடுத்துக் காட்டுகிறது

(கொழும்பு)

''போருக்கு முடிவுமில்லை, மக்களுக்கு நிவாரணமுமில்லை, சமாதானத்தீர்வில் அரசிற்கு நம்பிக்கையும் இல்லை''

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளர் ஒருவர் பட்ஜெட் பற்றிக் கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் பட்ஜெட்டில் 7 ஆயிரத்து ஐந்நூறுகோடி ரூபாவை பாதுகாப்பு செலவுக்கு ஒதுக்கியிருப்பது இலங்கை அரசு போர் மூலம் இனப்பிரச்சனைக்கு முடிவு கட்டலாம் என்ற தனது முடிவில் இன்னமும் நம்பிக்கை இழக்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.

கடந்த 15 வருட காலமாக பாரிய பொருளாதார சுமைகளை மக்கள் மீது சுமத்தியுள்ள நிலையில் புதிய பட்ஜெட் மேலும் மீள முடியாத சுமையைத் ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் போரைத் தொடர்வதற்குரிய சகல ஆயத்தங்களுடனேயே உள்ளது என்பதனை புதிய பட்ஜெட் முன்மொழிவுகள் புலப்படுத்துகின்றன.

இவ்வாறு பெயர் குறிப்பிட விரும்பாத அவ் அரசியல் துறை விரிவுரையாளர் தெரிவித்துள்ளார். (செ)

# சீனப் பொறியியலாளர்குழு இத்தாலிக்கு விஜயம்

[கொழும்பு]

இலங்கை கடற் படைக்குத் தேவையான நவீனரக ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கென சீனப் பொறியியலாளர் குழுவொன்று இத்தாலிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

அதி நவீன தாக்குதல் கருவிகள், ஏவு கலங்கள், எதிரிகளின் நடமாட்டங்களை துல்லியமாய் அவதானித்து இலக்கு வைத்து தாக்கும் சுடு கலன்கள் என்பனவற்றை சீனா கொள்வனவு செய்யவுள்ளது.

இலங்கையின் கடற்படையைப் பலப்படுத்தி சூழவுள்ள கடற் பிராந்தியத்தையும், புலிகளின் நடமாட்டங்களையும் கண்காணித்து தாக்குதல் நடத்தும் வகையில் இலங்கை அரசு சீனாவிடம் ஆயுதங்கள் கொள்வனவு செய்யவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [உ-4]

# இலங்கை கடற்படையில் நால்வருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை கடற்படையில் இரு ரியர்அட்மிரல் அதிகாரிகள் ஓய்வு பெறுவதையடுத்து புதிதாக நான்கு அதிகாரிகள் ரியர் அட்மிரல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கொமாண்டோ நிலையிலுள்ள சரத் றணகீர்த்தி, சரத் வீரசேகர, நந்தன தொழுகேவத்த, எல் டி. தர்மப்பிரியா ஆகியோர் ரியர் அட்மிரல்களாக பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இவர்களில் றணகீர்த்தி, வீரசேகர ஆகிய இருவரும் தற்போது இந்தியாவில் புதுடில்லி இராணுவக்கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்கள் டிசம்பர் மாதம் நாடு திரும்பவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்காவில் பயிற்சி பெற்றுவரும் தொழுகேவத்த அடுத்தமாதம் நாடுதிரும்பவுள்ளார். (உ-5)

# அடையாள மறியல்போர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் தமக்கு நியமனம் வழங்காததைக் கண்டித்து ஒரு நாள் அடையாள மறியற் போராட்டத்தை வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக எதிர்வரும் 14 திகதி நடத்தவுள்ளனர். (உ-5)

# தமிழுக்கு தமிழ்நாடு செய்யாததை இலங். தமிழர் செய்திருக்கின்றனர்

[கொழும்பு]

''தமிழுக்கு தமிழ் நாடு செய்யத் தவறிய பல விடயங்களை இலங்கைத் தமிழர்கள் செய்திருக்கின்றார்கள்.''

இவ்வாறு தமிழ் நாட்டைச் சேர்ந்த இணைய நிபுணர் பேராசிரியர் என். ஆனந்தகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகர மண்டபத்தில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு இணையத் தொழில்நுட்ப அறிவியல் பற்றிய கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கணனி அறிவு பெற தவர்கள் எதிர்காலத்தில் கல்வி அறிவு அற்றவர்களாகவே கருதப்படுவர்.

கணனித் துறையில் ஒவ்வொருவரும் அடிப்படைத் தகமை பெற்று இருக்க வேண்டும். பாடசாலையிலேயே கணனிக் கற்கை நெறி போதிக்கப்பட வேண்டும். ஒருமாணவன் பாடசாலையை விட்டு வெளியேறும் போது கணனிபற்றிய அறிவுடனேயே வெளியேற வேண்டும்

இவ்வாறு பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன் தெரிவித்தார். (செ)

# அமெரிக்க குழுவினருக்கு யாழ்ப்பாணத்தில்வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த, யாழ்ப்பாணக் கல்லூரி பொறுப்பாளர் சபையினரை வரவேற்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று ஆஸ்பத்திரியில் வீதியில் உள்ள யாழ்ப்பாணக்கல்லூரியின் இணை நிறுவனத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் தென்னிந்திய திருச்சபை பேராயர் எஸ். ஜெபநேசன் அமெரிக்காவில் இருந்து வருகைதந்து யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாக சபையின் உதவிப் பொறுப்பாளர் டாக்டர் எரிக்காஸ், திருமதிஎரிக்காஸ், டாக்டர்ஜேம்ஸ்விஜயகுமார், ரொம்வுலோசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நூலக, நூல் வசதியின்மை, நிதிப்பற்றாக் குறை, அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு தொடர்பாகவும் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-9)

# சிறுவர் பாதிப்பு

(வவுனியா)

கிளிநொச்சிசுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் வசிக்கும் 5 வயதிற்குட்பட்ட 9 ஆயிரத்து 958 சிறுவர்களுள் 3 ஆயிரத்து 976 பேர் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு போஷாக்கு குறைபாடு உடையவர்களாய் காணப்படுகின்றனர். (உ-5)

# ஜனாதிபதி மாளிகை ஜயவர்த்தனவிற்கு மாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வவாசஸ்தலத்தைஸ்ரீஜெயவர்த்தனபுரவிற்கு மாற்றும் முயற்சியில் அரசுத்தரப்பு தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந் நடவடிக்கையை தடுக்கும் முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க மற்றும் ஜே.வி.பி கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பாராளுமன்றம் உட்பட முக்கிய அரச செயலகங்கள் தலைநகருக்கு மாற்றுவதே முறையென அரசுதரப்பு கருதுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (க-07)

# நெல் விற்பனை செய்வதில் இடர்

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் வசமுள்ள நெல்லை விற்பனை செய்வதில் இக்கட்டான நிலை ஏற்பட்டுளளதாக உணவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அமைச்சர் நந்தசேன கெர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இக்கட்டான நிலை தோன்றியுள்ளமைக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய வசமுள்ள சிவப்பு அரிசியின் தொகை அதிகரிப்பே காரணமென அவர் மேலும் கூறியுள்ளார். (உ-4)

# தேயிலைப் பெட்டிகளை ஏற்றவிடாமல் தடுப்பு

[கொழும்பு]

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைப் பெட்டிகளை ஏற்ற விடாமல் தடுத்துளளனர்.

டிக்கோயா தோட்டத் தொழிற்சாலையிலிருந்தே இவ்வாறு தேயிலைப் பெட்டிகளை ஏற்ற விடாமல் தடுத்துள்ளனர்.

இங்கு லொறியில் ஏற்றப்பட்டிருந்த தேயிலைப் பெட்டிகளை பலாத்காரமாக லொறியிலிருந்து இறக்கியுள்ளனர்.

நானூறு ரூபா சம்பள உயர்வைக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இவர்கள் தமது கோரிக்கை நிறைவேறும் வரை தேயிலைப் பெட்டிகளை ஏற்றவிடமாட்டோம எனத் தெரிவித்துள்ளனர். [செ]

# நாட்டிற்கு அழிவுதரும் புதிய பட்ஜெட்

## ஜே. வி. பி. குற்றம் சாடல்

(கொழும்பு)

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எட்டாவது வரவுசெலவுத்திட்டம் நாட்டிற்கு அழிவை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு ஜே வி. பி. புதிய வரவுசெலவுத்திட்டம் பற்றிக் குற்றஞ் சாட்டியுள்ளது.

புதிய வரவுசெலவுத் திட்டத்தில் அரச, தனியார் ஊழியர்களுக்கோ, பொது மக்களுக்கோ எதுவித நிவாரணமும வழங்கப்படவில்லை.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் புதிய வரவு செலவுத்திட்டம் குறித்து மக்கள் பெரும் எதிர் பார்ப்புடன் இருந்தனர்.

ஆனால் இவ்வரவு செலவுத் திட்டத்தினால் நாட்டிற்கு பெரும் அழிவு ஏற்படும் என்பது புலனாகின்றது.

புதிய வரவுசெலவுத்திட்டத்தில் சகல வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் வளங்களை விற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜே.வி.பி. மேலும் வரவு செலவுத்திட்டம் பற்றிக்குறை கூறியுள்ளது. [செ]

# மாணவர்க்கு கணனி அறிவு

(மல்லாகம்)

இணுவில் மத்திய கல்லூரி ஆரமபப்பிரிவு மாணவர்களுக்கு கணனி அறிவைப் புகட்டுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை பாடசாலை நிர்வாகம் எடுத்து வருகின்றது. (உ-122

# அதிபர், ஆசிரியர்களுக்கு இன்று கடமை லீவு

(யாழ்ப்பாணம்)

இன்று திங்கட்கிழமை யாழ். இந்துமகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபததில் நடைபெறவுள்ள இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 27 வது வருடாந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும் சகல அதிபர்கள் ஆசிரியர்களுக்கும் தாபனக் கோவைக்கு அமைவாக கடமை லீவு வழங்கப்படல் வேண்டும் என்று இ.த.ஆ. சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை ஏற்றுக் கொண்டுள்ளார் என பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

எனவே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள் கடமை லீவைக் கோரி கோட்டக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளருக்கும் ஆசிரியர்கள் அதிபர்களுக்கும் அறிவித்துவிட்டு மகாநாட்டில் கலந்து மகாநாட்டில் எடுக்கப்படவுள்ள தீர்மானங்களுக்கும் பிரேரணைகளுக்கும் பூரண ஆதரவை வழங்குமாறும் மகாநாட்டை சிறப்பிக்குமாறும் அதிபர் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒருமித்தகுரலஎழுப்புமாறும பொதுச் செயலாளர் த. மகாசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

12. 03. 2001 திங்கள் காலை 9 30 மணிக்கு யா/ இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில நடைபெறவுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மகாநாட்டில் வடமராட்சி பகுதி அதிபர்கள் ஆசிரியர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக வடமராட்சியிலிருந்து விசேட இ போ.ச. பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுளளது என அறிவிக்கப்பட்டுளளது. (ச)

# சிறப்புடன் இடம்பெற்ற மகளிர்தின விழா

[யாழ்ப்பாணம்]

அகில உலக மகளிர் தின விழா கடந்தசனிக்கிழமை யாழ். மாவட்டக்கூட்டுறவு சபையினரால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவியும் மாவட்ட மகளிர் குழுத் தலைவியுமான திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் யாழ். வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெற்ற இவ் விழாவில் முதன்மை விருந்தினர்களாக பனை தென்னை வள அபிவிருத்தி சபையின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேசமூர்த்தியும், யாழ். மக்கள் வங்கியின் கன்னாதிட்டி கிளை முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக வேமபடி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம், யாழ். மனையியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகரட்ணம், யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர். எவ். அரியநாயகம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். [க-02-06]

# இராணுவ வீரர் மர்ம மரணம்

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை இரவு பலாங்கொடை இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் மர்மமான முறையில் இறந்துள்ளார்.

நிச்சமகாமயவைச் சேர்ந்த பந்துல சில்வா என்பவரே இவ்வாறு இறந்தவராவர்.

படையிலிருந்து தப்பியோடி தலைமறைவாக இருந்த இவரைப்பொலிசார் கைதுசெய்து பலாங்கொடை இராணுவ முகாமில் சேர்க்கப்பட்ட போதே மர்மமான முறையில் இவர் இறந்துள்ளார். (ந-5

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கும்

[கொழும்பு]

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவை சுயாதீனமாகவும் தீவிரமாகவும் இயங்க வைப்பது குறித்து ஆராய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயற் குழுக் கூட்டம் ஜனாதிபதி குமாரதுங்கா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற போதே இக்குழுவை நியமிப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நீதியமைச்சர் பட்டி வீரக்கோன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.யு குணசேகரா ஆகியோரைக் கொண்ட இக்குழு ஊழல் விசாரணை ஆணைக்குழுவை இயங்க வைப்பது குறித்து ஆராய்ந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் ஜனாதிபதிச் செயலக வட்டாரங்கள் கூறியுள்ளன. [உ-4]

# அகிம்சா வாதிகளுக்கு பயங்கரவாத முத்திரையா

## செல்லச்சாமி சீற்றம்

(கொழும்பு)

ஆயுதம் ஏந்தி வன்முறையில் ஈடுபடாது ஜனநாயக வழியில் அகிம்சைப் போராட்டம் நடத்திவரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்பொழுது பயங்கரவாத முத்திரை பொறிக்கப்படுகிறது

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான எம்.எஸ். செல்லச்சாமி அவசரகாலப் பிரேரணை விவாதத்தின் போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மலேசியாவில் தோட்டத் தொழிலாளர்கள் ஸ்கூட்டரில் வேலைக்கு செல்கிறார்கள். ஆனால் நமது நாட்டில் கால்நடையாக பாதணியில்லாது வெறுங்காலுடன் செல்கின்றனர் என்றார். (உ-5)

# சுகாதாரம் பேணுவதில் நல்லூர் பி. ச. மும்முரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள், பொது இடங்களில், உள்ள கழிவுகளை அகற்றி வீதிகள் பொது இடங்களை சுத்தமாக வைத்திருக்க நல்லூர் பிரதேசசபை ரூபா 5 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான இரண்டு சில்லு உழவுஇயந்திரங்களை கொள்முதல் செய்துள்ளது.

அத்துடன் வீதிகள், பொது இடங்களை பராமரிக்க ஒப்பந்த அடிப்படையில் ஆண், பெண் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்ள உள்ளதாக பிரதேசசபையின் தலைவர் க. மணிபல்லவ ராஜன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேசசபைக் குட்பட்ட பல வீதிகள் பிரதேசசபை ஊடாகவும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாகவும் இன்னும் சில நாட்களில் தார் வீதிகளாக செப்பனிட உள்ளதாக பிரதேசசபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (உ)

# சிறுவர் உரிமை பற்றி காவலூரில் கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கென சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு அண்மையில் யா/ கரம்பொன் சிறிய புஷ்பம களிர் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்துகொண்ட இக் கருத்தரங்கு மாவட்ட மட்ட சிறுவர் உரிமைகள் பயிற்சியாளர்களினால் நடத்தப்பட்டது.

ஏற்கனவே கிராம மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கு கருத்தரங்கு இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. (உ-75)

# காணாமல் போன கெற்பேலி இளைஞன்

(மந்திகை)

கெற்பேலியைச்சேர்ந்த இளைஞன் ஒருவன் கடந்த 6 ஆம் திகதி முதல் மந்திகைப் பகுதியிலிருந்து காணாமல் போய்விட்டதாக அப்பகுதி ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் வி. கே. ஜெகனிடம் முறைப்பாடு செய்யப்பட்டு அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு விடயம் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெற்பேலியை சேர்ந்த விக்னேஸ்வரன் குகரூபன் (வயது - 26) என்பவரே காணாமல்போன இளைஞராவர். (க-23)

# வடமராட்சியில் விபத்து இருவர் படுகாயம்

(மந்திகை)

மந்திகை மடத்தடிப் பகுதியில் கடந்த ஏழாம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த அல்வாய் தெற்கைச் சேர்ந்த வி. அப்பாக்குட்டி (வயது60) என்பவரும்,

கடந்த எட்டாம் திகதி யாக்கருப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஓடிக் கொண்டிருந்த பொழுது தவறி வீழ்ந்ததில் காயமடைந்த கே. வேலு (வயது67)என்பவரும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சிப்பகுதியில் அடிக்கடி மோட்டார், மற்றும் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-23)

# தீவக பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

[ஊர்காவற்றுறை]

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் எ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் போட்டிப் பணிப்பாளரும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகருமான எஸ். என். லோகநாதனின் நெறிப்படுத்தலின் கீழ் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை கோட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட அணிகள் இதில்பங்குபற்றின.

அவ்வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் யா-நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம் முதலாம் இடத்தினையும், யா-காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி இரண்டாவது இடத்தினையும், யா-காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வித்தியாலயம் மூன்றாவது இடத்தினையும், 17 வயதுப் பிரிவில் யா-காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி முதலாவது இடத்தினையும், யா-நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயம் 2-வது இடத்தினையும், யா-வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயம் மூன்றாவது இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவில் யா-வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வி. 1-வது இடத்தினையும், யா-நெடுந்தீவு றோ க மகளிர் வித்தியாலயம் 2-வது இடத்தினையும், யா-காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வி. 3-வது இடத்தினையும் பெற்றது.

ஆண்களுக்குரிய கரப்பந்தாட்ட போட்டியில் 17 வயதுப் பிரிவில், யா-ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி 1-வது இடத்தினையும், நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயம் 2-வது இடத்தினையும், யா-காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி 3-வது இடத்தினையும், 19 வயதுப் பிரிவில் யா-ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 1-வது இடத்தினையும், யா-நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயம் 2-வது இடத்தினையும், யா-வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயம் 3-வது இடத்தினையும் பெற்றன.

மென்பந்து துடுப்பாட்டத்தில் 19 வயதுப் பிரிவில் யா-வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயம் 1-வது இடத்தினையும், யா-நயினாதீவு மகா வித்தியாலயம் 2-வது இடத்தினையும், யா-காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் 3-வது இடத்தினையும் பெற்றன.

இப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் யாழ். மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்ற இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-75)

# இராசி பலன்

12-3-2001
(மாசி 28, திங்கள்)
திருதியை மு.இ 6.41 வரை
சித்திரை மு.இ 11.01 வரை
ராகுகாலம் 7.53- 9.23
சுபநேரம் 12.23- 1.53
சித்தாமிர்தம்.

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, வாகன வசதி, போசன சுகம், அபூர்வசந்திப்பு.

**இடபம்**
புதிய முயற்சி, சுகவாழ்வு, காரியம் வெற்றி. தனவரவு.

**மிதுனம்**
தாழ்வு நிலை, வியாபாரச் சிறப்பு, நினைத்த இடம் செல்ல முடியாமை, வியாதி.

**கடகம்**
நம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், காரிய தாமதம், தாய்வழி உறவு.

**சிங்கம்**
வாக்கு மேன்மை, சந்தோசமான சம்பவம், காரிய ஜெயம், பிரயாணம்.

**கன்னி**
கௌரவக் குறைவு, முயற்சி மந்தம், தனவிரயம், வாக்கு வாதம்.

**துலாம்**
பெரியோர் ஆசி, சயன சுகம், ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
உணாச்சி வசப்படல், சுப செலவு, அமைதிக குறைவு, காரிய அலைச்சல.

**தனுசு**
தெய்வ தரிசனம், நண்பர்கள் உதவி, பொருள் வரவு, காரிய வெற்றி.

**மகரம்**
சுபசெய்தி, முயற்சிவெற்றி, மேன்மை, தொழில்விருத்தி.

**கும்பம்**
பிரயாணம், ஆன்றோர் ஆசி, பதட்டம், புதிய திட்டமிடல்.

**மீனம்**
வீண் தொல்லை, வியாதி, மனக்கிலேசம், காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# வாகன அனுமதிப்பத்திரம் பொலிஸார் பரிசோதிப்பு

(மந்துவில்)

வீதியில் பயணம் செய்யும் வாகனங்களின் வரிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம்ஆகியவற்றைப் பரிசோதிப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

வடமராட்சி, யாழ்ப்பாணம், மற்றும் வலிகாமம் பகுதிகளில் இச் செயற்பாடு அதிகளவில், காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து வாகன அனுமதிப்பத்திரம் பெறுதல் மற்றும் வாகன வரிப்பணம் செலுத்துவதில் பொதுமக்கள் ஆர்வம காட்டிவருதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வீதி ஒழுங்கைப் பேணுவதில் வாகன ஓட்டிகள், மற்றும் பாதசாரிகளும் கூடிய அக்கறை கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-39)

# அமெ.தூதரின் கூட்டத்திற்கு பிரதேச சபை தலைவர்கள் அழைக்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அண்மையில் நடத்திய கூட்டத்திற்கு தாம் அழைக்கப்படாமை குறித்து யாழ். மாவட்ட பிரதேச சபை தலைவர்கள் பலரும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் குறித்து கருத்து வெளியிட்ட நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன்; தாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அதுமட்டுமன்றி உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழேயே பிரதேச சபைகளும் வருவதால் மேற்படி நிகழ்விற்கு பிரதேச சபைகள் அழைக்கப்படாதது கண்டனத்திற்குரிய தொன்றாகும்.

அத்துடன் மக்கள் சார்பில் கருத்துக்களை சொல்வதற்கு எமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இதே வேளை மேற்படி பொதுக் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவர்கள் பலர் கலந்து கொண்டபோதிலும் சில திணைக்களங்களுக்கு உரிய அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# போரூட் நிறுவன உதவியுடன் காரைநகரில் ஆங்கில வகுப்பு

ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத்தினால் போரூட் நிறுவனத்தின் உதவியுடன் காரைநகரில் ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

6 மாத காலம் இடம்பெறவுள்ள இவ் ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்பு எதிர் வரும் 15 ஆம் திகதி பி. ப 3. 00 மணிக்கு யாழ்/ காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில்வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளார்.

ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத்தின் தலைவர் தி. ஞா. செந்தமிழ்ச்செல்வன்தலைமையில் இடம்பெறவுள்ள ஆரம்ப வைபவத்திற்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக போரூட் நிறுவன காரைநகர் திட்ட அலுவலக திட்ட இணைப்பாளர் வை. கதிரமலை, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப்பணிப்பாளர் ரி. சிவதெட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (உ-75)

## இன்று ஒரு தகவல்

# நிம்மதி எங்கேஉண்டு?

நிம்மதி எப்பொழுதும் மனிதனுக்கு எட்டாத பொருளாகவே உள்ளது. வீட்டில் நிம்மதி இல்லை, சமூகத்தில் நிம்மதி இல்லை, ஏன் நாட்டில் கூட நிம்மதி இல்லை. உலகில் நிம்மதியான இடம் எங்காவது இருக்கா? என்று மனிதன் அல்லற் படுகிறான் கையில் நெய்யை வைத்துக் கொண்டு வெண்ணெய்க்கு அலைவது போல்.... உமாபதி சிவாச்சாரியார் கூறியது போல் வெள்ளத்துள் நின்று கொண்டு தாகத்தினால் வருந்துபவன் போல.. நிம்மதியை ஒவ்வொரு மனிதனும் தேடியலைகிறான். நிம்மதி எங்கேயிருக்கிறது என்று யாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை நிம்மதி என்பது அவரவர் மனத்திலேயே உள்ளது.

போதுமென்ற மனம் இருந்தால் அங்கே நிம்மதிஉறைந்திருக்கும். அடுத்தவனின் பொருளில் ஆசைப்படாமல் இருப்பவனின் நெஞ்சில் நிம்மதி நிறைந்திருக்கும். புலன்களையும் பொறிகளையும் கட்டுப்படுத்தியவனின் உள்ளத்தில் நிம்மதிநிறைந்திருக்கும்.

துன்பங்களைத் தூசாக மதிப்பவனின் மனதில் நிம்மதி மலர்ந்திருக்கும். வருமானத்தில் மன நிறைவு காணும் உழைப்பாளியின் மனதில் நிம்மதி நிலைத்திருக்கும். அன்பான மனைவி புரிந்துணர்வுடைய உறவினர், நன் மக்களையுடைய குடும்பத்தினன் தன் நலன் கருதாத நண்பனைஉடையவன் இப்படியானவர்களின் மனதில் நிம்மதி உறைந்திருக்கும். கடவுளைப் பூரணமாக நம்பியவனின் உள்ளத்தில் நிம்மதி நிலைத்திருக்கும். தனது கடமையைச் சரிவரச் செய்யும் ஊழியனின் மனதில் நிம்மதி இருக்கும். அச்சமில்லாதவனின் மனதில் நிம்மதி அதிகமாக இருக்கும்.

இப்படி ஒவ்வொருவரின் மனதிலும் இருக்க வேண்டிய நிம்மதியை அறியாமையால் ஒவ்வொருவரும் தேடியலைகிறார்கள். தேடிப் பெறும் பொருள் அல்ல நிம்மதி என்பதை உணர்ந்தவன் மனதில் நிம்மதி துளிர்த்து வளரும். நிம்மதியின் மூலம் ஒரு மனிதன் சகலவளங்களையும் பெற முடியும். உறுதியுடையவனாக இருக்கமுடியும். நோய் அவனை அணுகாது. முதுமை அவனை நெருங்காது எந்நாளும் இன்பமாகக் கழியும்.

வேலூரில் நந்தன் என்ற துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஊரின் ஒதுக்குப்புறமான காட்டின் அருகே குடிசை ஒன்று அமைத்து நிம்மதியாக வாழ்ந்து வந்தார். கிராம மக்கள் விறகு சேகரிப்பதற்காகவும் வேட்டையாடுவதற்காகவும் அக்காட்டுக்குச் செல்வதுண்டு. அவ்வேளைகளில் துறவியுடன் தங்கிச் செல்வதுண்டு. தனது குடிசைக்கு வரும் மக்களுடன் துறவி மிகவும் அன்பாகப் பேசுவார். அவர்களது குடும்ப விஷயங்களைக் கேட்பார். அவர்களுக்கு ஆலோசனைகள் கூறுவார். துன்பப்பட்ட மக்களுக்கு அவரின் வார்த்தைகள் இதமாக இருந்தன.

நாளடைவில் அந் நாட்டு மக்கள் எல்லோரும் வந்து அவரைத் தரிசித்துச் சென்றனர். அவரது வார்த்தைகள மக்களுக்கு இன்பத்தைக் கொடுத்தன. அதனால் அவர்களது மனதில் நிம்மதிதோன்றியது. நாளடைவில் துறவியினது புகழ் அரசனின் காதுகளுக்கு எட்டியது. மக்களின் மனதைக் கவர்ந்த அத்துறவியை அரசன் அரண்மனைக்கு வருமாறு அழைப்பு விடுத்தான். துறவிமறுத்துவிட்டார். அதனால் பொன் பொருட்களுடன் முதல் மந்திரியை துறவியிடம் அனுப்பினான் அரசன். துறவி அவற்றை ஏற்க மறுத்துவிட்டார். ஒரு நாள் துறவியின் மேல் அதிகபாசமுள்ள முத்தையன் என்ற கூலித்தொழிலாளியின் வீட்டுக்குச் சென்றார் துறவி.

துறவி முத்தையனின் வீட்டுக்குச் சென்ற விசயம் அரசனுக்குத் தெரிந்தது. படைவீரரை அனுப்பி துறவியை கைது செய்து அரண்மனைக்கு கொண்டு வரும்படி படைத்தளபதிக்கு கட்டளையிட்டான் அரசன். துறவி சிங்காசனத்தில் அமர்ந்திருந்த அரசனைப் பார்த்துச் சிரித்தார் துறவியின்சிரிப்பு அரசனுக்கு கடுஞ் சினத்தைக் கொடுத்தது. 'இந்தப்பரதேசியைசிரச்சேதம் செய்யுங்கள்' என்று உத்தரவிட்டான். துறவி பலமாகச் சிரித்தார். பின் அரசே நிம்மதியாக வாழும் நான் உன் மூலம் பூரணமான நிம்மதியடைவதை நினைக்க மகிழ்ச்சியாக உள்ளது ஆனால் ஒன்று மட்டும் எனக்குக் கவலையாயிருக்கிறது என்னைக்கொல்வதன் மூலம் உன் வம்சத்துக்குக் கேடு உண்டாகப் போகிறது....

அரசன் சிறிது நேரம்சிந்தித்தான் பின் 'முனிவரே எனது ஆணவத்தை அகற்றி எனது வம்சத்தைக் காப்பாற்றிவிட்டீர்கள் என்று கூறி அவரது பாதங்களை பற்றினான். துறவி அரசனை ஆசீர்வதித்தார். அரசன் அவரை தன்னுடன் அரண்மனையில் தங்கியிருக்கும்படி வேண்டினான். துறவி மறுத்து விட்டார். எனது குடிசையில் உள்ள நிம்மதி எனக்கு இங்கு கிடைக்காது' என்றார். அப்படியானால் நான் தரும் திரவியங்களையாவது பெற்றுக் கொள்ளுங்கள் என்று இரந்தான் அரசன். 'அரசே எனக்குத் தேவையான அத்தனையும் என்னிடம் உண்டு. இவையெல்லாம் எனக்குத் தேவையில்லாதவை. அரண்மனையில் இவற்றைக் காப்பாற்றுவதற்காக ஏராளமான காவற்காரர்கள் இருக்கிறார்கள். இவற்றைக்காவல் காக்க எனது குடிசையில் யார் இருக்கிறார்கள். தேவையில்லாத பொருட்களைத் தேடுவதன் மூலமும் அவற்றிற்கு ஆசைப்படுவதன் மூலமும் தான் ஒருவன் தனது நிம்மதியைஇழக்கிறான். பெறுமதியுள்ள பொருட்களின் மூலம் பெறுமதிக்கு அப்பாற்பட்ட நிம்மதியை இழக்க நான் விரும்பவில்லை என்றார் துறவி.

கே.வி.குணசேகரம்

# சிறுவர் முன்னேறுவதற்கு தடையான வறுமை ஒழிக்கப்பட வேண்டும்

## அமெரிக்க யுனிசெவ்பிரதிநிதி தெரிவிப்பு

(தென்மராட்சி)

சமுதாயத்தில்சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்து வருகின்ற வறுமை, வன்முறை மற்றும் பாரபட்சம் போன்றவை இல்லாமல் ஒழிக்கப்படல் வேண்டும். அதனை நோக்காகக் கொண்டு எமது செயல்பாடுகளை நகர்த்தல் வேண்டும். சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் மூலதனம் மிகவும் முக்கியமானதாகும். சமுதாயத்தில் உண்மையான மாற்றத்தினை சிறுவர்கள் மத்தியில் இருந்து தான் ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவிலுள்ள யுனிசெவ் நிறுவனத்தின் பிரதி செயல் திட்ட அதிகாரியான அன்றே றொப பொறெயிட் மொறட்டுவா சர்வோதய சிரமதான இயக்கத்தை ஆரம்பித்து வைக்கப்பட்ட சார்க் நாடுளின் பிரதிநிதிகள் பங்குகொண்ட சிறுவர்களின் வறுமை, பாரபட்சம் போன்றவற்றினைக் களைவது தொடர்பான மாநாட்டின் போது பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ ரீ ஆரியரத்ன தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் இந்தியா, இலங்கை, மாலைதீவு, யப்பான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து 60 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர்

யப்பானிலுள்ள அநிகட்டோ பவுண்டேசனின் அனுசரணையுடனான இம் மாநாட்டினை, யுனிசெவ் மற்றும் சர்வோதய இயக்கம் நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

யுனிசெவ் நிறுவனத்தின் பிரதி செயல் திட்ட அதிகாரியான அன்றே றொப பொறெயிட் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

உலகில் இன்றைய காலகட்டத்தில் சுமார் 160 மில்லியன் சிறுவர்கள் போஷாக்கின்மையால் உடல், உள வளர்ச்சி இன்றி இருந்து வருகின்றனர். அத்துடன் 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட 250 மில்லியன் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மேலும் சுமார் 22 மில்லியன் சிறுவர்கள் 2.5 கிலோகிராம் நிறைக்கும் குறைவான நிறையுடன் பிறக்கின்றனர்.

எனவே சிறுவர் நலனின் அக்கறையும் ஆர்வமும் கொண்டு உழைத்துவருகின்ற தொண்டர் அமைப்புகள், அரச அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அடிமட்ட அமைப்புகள் சிறுவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திட உழைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். (க-77)

## மிதிவெடியில் சிக்குண்டு காலில் காயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள கல்லடிமூட்டுச் சந்தியிலுள்ள தனது வீட்டையும், அரிசி ஆலையையும் பார்வையிடச் சென்ற எஸ். ஜெயரத்தினம் (ஜெயம்) என்பவர் மிதிவெடியில் சிக்குண்டு காலில் காயப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பகுதிக்கு வீடுகளைப் பார்வையிடச் செல்வோர் தயக்கம் காட்டி வருகின்றனர்.

(உ- 77)

## சங்காபிஷேகம்

(அரியாலை)

இணுவில் மருனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோவில்மண்டல அபிஷேகமும் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகமும் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது. பகல் 1 மணிக்கு மகேஸ்வர பூசையுடன் இடம்பெறும். (உ-106)

## விசர் நாய் கடித்து 10 பேர் பலி

(வவுனியா)

கடந்த இரண்டு மாதங்களில் மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் விசர் நாய்க் கடிக்கு இலக்காகி பத்துப்பேர் உயிரிழந்துள்ளனர்.

வாகரைப் பிரதேசத்தில் அமைந்திருந்த அரசமருத்துவமனை மூடப்பட்டுள்ளதனால் இவ் வீண் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ- 5)

## பனைதென்னை வள கூ.ச. கிளைக்குழுத் தேர்தல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத்தேர்தல்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி இடம் பெறவுள்ளன.

ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கு, நாரந்தனை வடக்கு, எழுவை தீவு, ஒலுவில், நாரந்தனை கிழக்கு, காம்றேட் ஆகிய ஏழு கிளைகளிலேயே இக் குழுத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளது

இதேவேளை கடந்த காலங்களில் 9 கிளைகளில் கிளைக் குழுத் தேர்தல் இடம்பெற்றதாகும் தற்போது அவற்றில் இரண்டு பிரிந்து அனலைதீவு பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்து விட்டதால் இவ் வருடம் 7 கிளைகளிலேயே கிளைக் குழுத் தேர்தல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ-75)

## பெண்கள் நாட்டின் கண்கள்

(கொழும்பு)

அந்நியச் செலாவணியை நாட்டுக்கு வருவாயாகப் பெற்றுக் கொடுப்பதில் பெண்கள் முன்னணி வகிப்பதாகப் பிரதித் தொழில் அமைச்சர் நீல் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களில் அதிக தொகையினர் பெண்களே எனக் குறிப்பிட்ட அவர் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

(உ- 4)

## குப்பை நிரம்பிய வீதிகள் சிரம நிலையில் மக்கள்

(கல்வயல்)

யாழ். மாவட்ட செயலகத்திற்கு கிழக்குப் புறமாக பாரதிவீதியூடாக கச்சேரி-நல்லூர் வீதியையும் கண்டி வீதியையும் இணைக்கும் கச்சேரி வீதியில் கடந்த இருவாரங்களாக குப்பைகள் அகற்றப்படவில்லையென அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குறுகலான சனசந்தடி மிக்க இவ் வீதியில் குப்பைகள் சேருவதால் இவ்வீதியால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி குன்றும் குழியுமாக நீண்டகாலமாக திருத்தப்படாது இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விழிப்புடன் செயலாற்ற வேண்டியது அவசியம் என்றும் நாங்களும் வரிப்பணத்தை செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். (க-111)

## மீண்டும், கதிர்காம ஆலயத்தில் 'ஓம்' சின்னம்

(கொழும்பு)

'வரலாற்றுப் புகழ் பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் முகப்பில் மீண்டும் 'ஓம்' சின்னத்தை வைக்க அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு திகாமடுமல்ல மாவட்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் பாராளுமன்றில் உரையாற்றியபோது கோரிக்கை விடுத்துள்ளார்

இந்துக்களின் புனித தலமானகதிர்காம முருகன்ஆலய முகப்பில் இருந்த 'ஓம்' சின்னம் உடைக்கப்பட்டுள்ளது.

எனவே புத்த சாசனத்தை அகற்றி 'ஓம்' சின்னத்தை மீண்டும் மீளமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# பெண்களின் புறத் தடை நீங்க யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும்

## வவுனியா ஒருங்கிணைப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள புறத்தடைகள் நீங்க யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு சர்வதேச சமூகம் இன்றுள்ள சமாதான சூழலைப் பயன்படுத்த வேண்டும்.

சர்வதேச மகளிர் தினத்தின் போது வவுனியா ஒருங்கமைப்புகுழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

உலகில் சரிபாதியினராக விளங்கும் பெண்கள் ஆகியஎம் மீது திணிக்கப்படும் அடக்குமுறை சுமைகளினால் உறைந்துபோயிருக்கும் நாங்கள் மீண்டும் உயிர்ப்படைய விரும்புகிறோம்;

எம்மை அழுத்தும் புறத்தடைகளை உடைத்து விடுத்தலையாகி ஆளுமை செழிப்பு மிகுந்த வலிமையுள்ள மானிடர்களாக வாழவே நாங்கள் விரும்புகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ)

# சட்டசபைத் தேர்தலில் அ. இ. அ. தி.மு.க செயலர் போட்டியிட முடியாது

## வை. கோ.வும் எடுத்துரைப்பு

(சென்னை)

எதிர் வரும் சட்ட சபைத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா போட்டியிட முடியாது என மறுமலர்சி திராவிட முன்னேற்றக்கழகம் பொதுச்செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைச் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது ஜெயலலிதாவிற்கு நீதிமன்றத் தண்டனை வழங்கப்பட்டதன் காரணமாக அவர் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட முடியாது.

இது தொடர்பான தகவலை விரைவில் தேர்தல் ஆணைக்குழு வெளியிடும் என்று தாம் எதிர் பார்த்திருப்பதாகவும் அவர் அச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். உ-9)

# ஆகாஷ் ஏவுகணை விரைவில் பாவனை

(புதுடில்லி)

குறுந்தூர வீச்சுக்கொண்ட சக்திவாய்ந்த ஆகாஷ் ஏவுகணைகளைப் பாவனைக்காக தயாரிக்கப் போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் இந்தக் குறும்தூர ஏவுகணை 55 கிலோ எடையுடைய வெடிபொருளை 25 கிலோ மீற்றர் தூரத்திற்கு எடுத்துச் செல்லும் திறன் வாய்ந்ததாகும்.

இவ் ஆகாஷ் ஏவுகணைப் பரிசோதனை கடந்த 15 நாட்களில் 3 முறை வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டதையடுத்தே இந்திய இராணுவத் தேவைகளுக்கு இதனைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# தேங்காய் எண்ணெய் மூலம் வாகனம் ஓட்டலாமா?

## தாய்லாந்து விவசாயி கண்டுபிடிப்பு

(பாங்கொங்)

தாய்லாந்து நாட்டு விவசாயி ஒருவர் தேங்காய் எண்ணெய்மூலம் வாகனம் ஓட்டும் முறையைக் கண்டு பிடித்துள்ளார்.

80 வீத தேங்காய் எண்ணெயுடன் 20 வீத மண்ணெண்ணெயைக் கலந்து வாகனத்துக்குப் பயன்படுத்தும் இம்முறையால் ஒரு லீற்றர் எண்ணெயில் கூடுதல் தூரம் பயணிக்க முடிவதுடன் செலவும் மிச்சமடைசிறது.

மேற்படி கண்டுபிடிப்பாளர் கிராமப்புற பாடசாலை ஒன்றின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# தெலுங்கு தேசம் கட்சி மீது காங்கிரஸ் கண்டனம்

(புதுடில்லி)

தெலுங்கு தேசம் கட்சியினர், தமது அணியைச் சேர்ந்த 7 பேரைக் கொன்றதை காங்கிரஸ்கட்சி வன்மையாக கண்டித்துள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் குன்னூர் மாவட்டத்தில் காங்கரஸ் கட்சியினர் ஜீப் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை,

மறைந்திருந்த தெலுங்கு தேசக் கட்சியினர் வாகனம் மீது தாக்குதல் நடத்தியமையும்,

தாக்குதலில் இருந்து தப்பியோட முனைந்தோரை கத்திகள் பொல்லுகள் சகிதம் துரத்தித் தாக்கியதும் தெரிந்ததே. (உ)

# திருட்டுக் கார் ஓட்டும் பராகுவே ஜனாதிபதி

(அஸுன்ஸியோன்)

பராகுவே நாட்டின் ஜனாதிபதி லூயிஸ் கொன்ஸாலெங் மக்ஸி பாவிக்கும் கார் சட்ட விரோதமாக அந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட திருட்டுக்கார் என அந்நாட்டு பொலிஸாரும் நீதிமன்ற அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

அண்டை நாடு ஒன்றில் இருந்து இக் கார் திருடப்பட்டதாகவும், தென் அமெரிக்க அண்டை நாடுகளிலிருந்து திருடப்பட்ட கார்களில், கறுப்புச்சந்தை வியாபாரம் செய்வதில் பராகுவே பிரசித்தி பெற்று விளங்குவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. [உ]

# இஸ்ரேலை ஒடுக்க ஈராக்கின் ஆதரவை நாடியுள்ள பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்

(ரெல்அவில்)

இஸ்ரேலின் புதிய பிரதமர் ஏரியல் ஷரோன் குறித்து பலஸ்தினீயர்கள் மத்தியில் அவநம்பிக்கை காணப்படுகின்ற அதேவேளை இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் தமக்கு ஆதரவை அளிக்குமாறு பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் ஈராக்கை கேட்டுக் கொண்டுள்ளார்

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை தடுப்பதற்க்கு பலஸ்தீனியர்கள் மேற்கொண்டுள்ள போராட்டத்திற்கு ஈராக் தனது ஆதரவை வழங்கும்எனவும் பலஸ்தீன ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பலஸ்தீனியர்களுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறு ரஷ்யா இஸ்ரேலைக் கேட்டுள்ளது. மத்தியகிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு ரஷ்யா ஆதரவு வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## உலக தரிசனம்

## செய்திப்பரல்

★ இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் தீவிரவாதிகள் குழுவொன்று ஆதிவாசிகளைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

★ சீனாவின் நான்ஜிங் பிரதேசத்தில் 16தொன் எடை உள்ள கல்லால் செய்யப்பட்ட ஆமை ஒன்று மண்ணிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

★ அவுஸ்திரேலிய மாகாணம் ஒன்றின் வைத்தியசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், நூதனசாலைகளிலும் 25,000 இற்கும் மேற்பட்ட மனித உறுப்புக்கள் வைக்கபபட்டுள்ளன.

★ உக்ரைன் ஜனாதிபதி லியோனிட்குச்மா, அமைச்சர்கள், சிவில் சேவையாளர்கள்எதிர்க்கட்சிகளுடனான தொடர்பை பகிரங்கமாகத் துறக்கவேண்டும் எனக் கூறியுள்ளார்.

★ மலேஷியாவில் கைது செய்யப்பட்டிருக்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதி அஸாம்மொஹட்நூரை உடனடியாக விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. (உ- 3)

# பாடசாலை அதிபர்களை மிரட்டிய மாணவன்

(இலண்டன்)

பாடசாலை கம்பியூட்டரை பயன் படுத்தி மாணவன் ஒருவன் 13பாடசாலை அதிபர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்துள்ள சம்பவம் ஒன்று வடகரோலினாப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குண்டுத்தாக்குதல் மூலம் மேற்படி 13 பாடசாலை அதிபர்களையும் கொல்லப் போவதாக இவன் மிரட்டியுள்ளானாம்.

18வயதான ஷட்ரோவில் என்பவரே பிரஸ்தாப மாணவன் ஆவார்.

இதுவிடயம் குறித்துபொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (க)

# இஸ்ரேலின் தலைநகர் ஜெருசலேம் மட்டுமே

## அமெ.இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

[ரெல்அவிவ்]

ஜெருசலேமே இஸ்ரேலின் தலைநகர் என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவுல் கூறிய கூற்றை இஸ்லாமிய மகாநாட்டு அமைப்பின் தலைமைப் பதவியைத் தற்போது வகிக்கும் ஹட்டார் அமைப்பு மறுத்துள்ளது.

ஐ.நா. சபையின் 478 வது சரத்தில் இஸ்ரேல் ஜெருசலேமின் கிழக்குப் பகுதியை தனது தலை நகரக்கிக் கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இராஜங்க அமைச்சரின் மேற்படி கூற்று தவறானது என ஹட்டார் சுட்டிக் காட்டிருள்ளது.

இருப்பினும் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலேமின் ஒரு பகுதியை தனது தலைநாகராகக் கருதிவருவது குறிப்பிடத்தக்கதாகும். (க-2)

# நடிகர் திலகத்துக்கு நெஞ்சுவலி

(புதுடில்லி)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நெஞ்சுவலி காரணமாக சென்னை மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமைமுதல் அனுமதிக்கப்பட்டுளளார்.

இவரது தேக நிலையில் மேம்பாடு ஏற்பட்டு வருவதாக வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன; (உ)

# அமைச்சர் ஜேர்மன் பயணம்

(இலண்டன்)

சென்ற சில தினங்களாக பாகிஸ்தானில் தங்கியிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கிருந்து ஜேர்மனுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நான்கு நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதிஜேர்மன் சென்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக் கதாகும். (க-2)

# 4 சடலங்கள் மீட்பு

(காஸ்டெலோ)

போர்த்துக்கல் பால விபத்தில் பலியானவர்களில் 4 பேரின் சடலங்கள் ஸ்பெயின் கரையோரத்தில் ஒதுங்கியுள்ளன.

இவற்றில் இரு பெண்களின் சடலங்கள் ஒருஇடத்திலும் மற்றும் இரு சடலங்கள் வேறோர் இடத்திலும் மீட்கப்பட்டன. (உ)

# ஷெரீப் தொடர்ந்தும் சவூதியில்

(இஸ்லாமாபாத்)

சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தப்பட்ட முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது குடும்பத்தவர்கள் விரைவில் பாகிஸ்தான் திரும்பும் சாத்தியக்கூறுகள் இல்லையென அந்நாட்டரசு தெரிவித்துள்ளது. (உ)

# அமெரிக்கா அவதானம்

சீனாவின் பாதுகாப்புச் செலவினம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாய்வானின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுமா என்பது குறித்து அமெரிக்கா அவதானித்து வருகின்றது (உ-3)

# லட்சக்கணக்கான பெண்கள்தினமும் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர்

## - சர்வதேச மன்னிப்பு சபை கண்டனம்

இலட்சக்கணக்கான பெண்கள் தினமும், தமது குடும்ப அங்கத்தினர்களால் அல்லது தொழில் வழங்குநர்களால் சித்திரவதைக்கு உள்ளாகுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை ஓட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே மேற் கண்டவாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராகவன் செயல்கள் இழைக்கப்படுவதற்கு பெரும்பாலும் அரசின் ஏஜெண்டுகளும், தீவிரவாத அமைப்பினருமே காரணமாக உள்ளனர்.

உலக வங்கியின் புள்ளி விபரப்படி 5 பெண்களில் ஒருவர் உடல் ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக வன்முறைக்கு ஆளாகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் திருமணம் செய்த பெண்களில் 40% மாணவர்கள் உதைக்கப்பட்டு அடிக்கப்படுகின்றனர்.

ஜோர்தான், துருக்கி, ஈராக், பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் பெண்கள் துன்புறுத்தலிற்கு உள்ளாக்கப் படுகின்றனர்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# முல்லை-கல்வி வலயத்தில் ஆசிரியருக்கு பற்றாக்குறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச்சேர்ந்த புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் மிகுந்த ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது.

65ஆசிரியர்கள் தேவையான நிலையில் 39 ஆசிரியர்கள் மட்டுமே கடமை புரிவதனால் 26 ஆசிரியர்களின் தேவைப்பாடு தொடர்ந்து பல வருடங்களாக காணப்படுகிறது.

இதன் காரணமாக ஆயிரத்து706 மாணவர்கள் கல்வி கற்கும் மேற்படி பாடசாலையில் 44 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றவாறு அமைந்துள்ளது.

எட்டாம் தரம் முதல் உயர் தரம் வரையான அறிவியல் பாடங்களைக்கொண்ட இப் பாடசாலையில் சாதாரண தரம் வரை ஆயிரத்து 108 மாணவர்களும் உயர்தரத்தில் 598மாணவர்களும் கல்வி கற்றுவருகின்றனர். (உ)

யாழ்ப்பாணம்

ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து
-குறள்-

# வலம்புரி

## ஆசிரியர் சங்க மாநாடு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாநாடு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. 1974ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் கடந்த 27 வருடங்களாக ஆசிரியர்களின் உரிமைகளைப்பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளது. ஒரு தொழிற்சங்கம் அதிலும் சிறுபான்மை இனம் சார்ந்த தொழிற்சங்கம் இற்றைக்கு 27வருடங்களாக தனது தொழிற்சங்க நடவடிக்கைகளை உயிர்த் துடிப்புடன்முன்னெடுத்து செல்வது மிகவும் பாராட்டுதற்குரியது.

பொதுவாக இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் அரசியல்பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன இதனால் ஆளுங்கட்சித் தொழிற்சங்கங்கள்அந்தந்த காலங்களில் அடக்கி வாசிப்பதும், எதிர்க் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் அட்டகாசமாடுவதும் வழமை.

ஆனால் இலங்கையில் ஆசிரியர்களாக இருக்கும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில்பலமான தொழிற்சங்கமாக அரசியல் பின்னணியின்றி தனித்துதொழிற்சங்க நடவடிக்கைகளில் மட்டும் தனது உரிமையை எட்டிப் பிடிக்கும் தொழிற் சங்கமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விளங்குகின்றது.

அச் சங்கத்தின் மாநாடு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது நீண்ட காலமாக வடபுலத்து ஆசிரியர்கள் அனுபவிக்கும், எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்குபெருவாய்ப்பாக இருக்கும் என்பது தெளிவு.

சம்பள நிலுவைகள், இடமாற்றம், பதவியுயர்வுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இம் மாநாடு முடிவு கட்ட வேண்டுமென்பதுடன், தீவகம் போன்ற கஸ்ரப் பிரதேசங்களுக்குஓர் திட்டமிட்டஒழுங்குமுறையில்ஆசிரியர்களைஅனுப்பி அப்பகுதி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவவும் இம் மாநாடு வழிவகுக்க வேண்டும்.

அப்போதுதான் இடமாற்றங்களில் செல்வாக்குக் கலாசாரம் ஆதிக்கம் செலுத்தாமல், எல்லோரும் கஷ்ரப் பிரதேசங்களில் கடமையாற்ற வேண்டுமென்ற புரிந்துணர்வு ஆசிரியர்களிடம் ஏற்படும். அத்தகைய ஓர் நிலை ஆசிரியர்களிடம் ஏற்படுமானால் இடமாற்றுப் பிரச்சினையேஇல்லையென்பதாகிவிடும்.

# மேல் நாட்டு நாகரிக மோகத்தின் விளைவுகள்

# தமிழ் மொழி, கலை, கலாசாரங்களை அழிக்கிறது

மேல்நாட்டிலிருந்து எமது நாட்டிற்குள் இறக்குமதியகும் புதிய நாசரிகங்களின் ஆதிக்கத்தினால் எமது பாரம்பரிய கலாசாரங்கள் சீரழிந்துவிடுமோ என்ற கேள்வி தமிழ்த் தேசிய உணர்வுடைய மக்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ளது.

நாளுக்கு நாள் உலகம் மாறிவரும் வேகத்தில் எமது இனத்தின் தனித்துவமான கலாசாரச் சுவடுகளும் அழிக்கப்பட்டு புதிய கலாசாரம் தோன்றிவிடுமாஎன்பதே இன்றைய கேள்வியாக உள்ளது.

கலாசாரம் எனும் போது உணவு, மொழி கலை. நடத்தை, உடை, சமய பாரம்பரியங்கள், நம்பிக்கைகள், என்பன முதலிடத்தைப் பிடிக்கின்றன,

## உணவு

பண்டைய காலத்தில் எமது தேசிய உணவாக நெல்லரிசிச் சோறு மற்றும் தானியவகைகளே இருந்து வந்தன. அத்துடன் தாவர விளைப் பொருட்களும், ஏனைய விலங்கு உணவுகளும் இடம்பெற்றுவந்தன.

அவை ஒவ்வொன்றும்குறித்த ஒவ்வொரு வடிவில் உணவுப் பண்டங்களாக மாற்றப்பட்டுப் பரிமாறப்பட்டன ஆனால் தற்போது மேலை நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உற்பத்திப்பொருட்கள் 'பைக்கட்'களில் தயார் நிலையில் வந்திறங்குகின்றன. இதனால் எந்த விதசிரமமுமின்றி உணவுப் பெருட்களைத் தயாரித்துக் கொள்ள முடிகின்றது.

இது ஒரு வகையில் இலகுவான ஒரு முறைக்கு உதவுகின்றது அவசர வேளைகளில் தத்தமது கடமைகளைத் துரிதமாக நிறை வேற்றிவிடலாம்.

ஆனால் குடும்பத்தேவைக்கு ஒன்றிணைந்த செயற் பாட்டுடன் தமது உழைப்பைப் பயன்படுத்தி உணவுப் பொட்களை ஆக்கிப் பரிமாறும் திருப்தி இதனால் மழுங்கடிக்கப் படுகிறது. அத்துடன் தானியங்கள், விளை பொருட்கள் அனேக இரசாயனக் கலவை கட்குட்படுத்தப்பட்டு அனேக சக்திகளை இழந்த நிலையில் போலி விளம்பர முத்திரை குத்தப்பட்டு உலவவும் வாய்ப்பாகின்றது.

## மொழி

உலக நாடுகள் அனைத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சர்வ தேச மொழியான ஆங்கிலத்தின் ஆதிக்கம் அதிகரித்தே காணப்படுகின்றது.

செந்தமிழை மறந்து விட்டோம். எங்களுக்கு தமிழில் பேசவராது என்று சொல்வதைக் கூட எம்மவர்கள் பலர் ஒரு பெருமையாகக் கருதிக் கொள்கின்றனர்.

பேசும் இரண்டு வசனங்களிடையே ஆங்கிலச் சொற்கள் புகுந்து கொள்ளும். ஏன் இப்போது சிலரது வாய்ச் சொற்களில் தமிழுடன் ஆங்கிலம் மட்டுமன்றி சிங்களச் சொல்லின் ஆதிக்கமும் எதிரொலிப்பதைக் காணலாம்.

இதனால் தமிழ் மொழியின் பேச்சுச் சுதந்திரம் விற்கப் படுகின்ற தென்றே கூறலாம். இப்படியே காலம் செல்லச் செல்லத் தமிழ் மொழிக்கு புதுவடிவம் கொடுக்கப்பட்டு விட்டாலும் ஆச்சரியமில்லை. உதாரணமாக எவரும் பேருந்து தரிப்பிடம் என்று பேசுவதே இல்லை 'பஸ்ராண்ட்' என்றே கூறுவர், இதுவே தமிழ் என நினைத்துக் கொள்கின்றனர்.

**ஆ. ஜென்சன் றொனால்ட்**
ஈச்சமோட்டை

## கலை

எமது இனத்துக்குரித்தான கலை தொடந்து காணாமல் போய்க் கொண்டேயிருக்கின்றது. பாரம் பரியக் கலை வடிவங்களான தெருக்கூத்து, நாட்டுக் கூத்து, மேடை நாடகங்கள், கரகாட்டங்கள், இலக்கிய வில்லிசை என்பன மறைந்து கொண்டே போகின்றன.

மேலைத் தேயக் கலைகள் எம் கலையைக் கலைத்துக் கொண்டேயிருக்கின்றன. வீடு தோறும் தொலைக் காட்சிப் பெட்டிகளிலும், திரை அரங்கங்களிலும் மேலைத் தேய கலைகளின் ஆதிக்கம் மிகுந்த சினிமா ஆட்கொண்டு விட்டது.

இசைகளிலே துள்ளிசையும் மெல்லிசையை வீழ்த்தி விட்டது. இராகங்கள் மறந்து வசனங்களை இடைவெளியின்றியும் இடையிடையே முறித்தும் பாடல்கள் பிறந்து விடுகின்றன.

நாட்டியக் கலையும் தனது இடத்தைப் பெரும் சிரத்தையுடனேயே பேணிக் கொள்ள வேண்டியுள்ளது.

## நடத்தை

மக்களின் நடத்தைக் கோலங்கள் கூட மாறுபட்டதாகவே அமைந்துள்ளன. உறவுகளை அன்புடன் வரவேற்பது, மனம் விட்டு அளவளாவுவது கலந்தாலோசிப்பது எல்லாம் மலையேறிவிட்டன.

எங்கும் இயத்திரங்களாக மக்கள் வாழ்க்கை மாறிப் போகின்றது. விழாக்களில் கலந்து கொள்ள முடியாதவர்களும் அதற்காக வாழ்த்து மடல்கள் மூலம் தமது வரவுகளைப் பதிவு செய்பவர்களுமே அதிகம்.

இழப்பீடுகளில் மனம் விட்டு அழுவதுகூட இப்போது அநாகரிகமாகிவிட்டது. ஆறுதல்களும், வாழ்த்து மொழிகளும் உதட்டளவில் அடங்கிப் போகின்றன.

பந்திகளில் அமர்ந்துவாழை இலையில் உண்ணும் சுகம் மலையேறி, கதிரைகளிலுட்கார்ந்து தகரப்பீங்கான்களில் உண்ணுவதே தரமென்றாகிவிட்டது. மங்களகரமான நிகழ்வுகளில் தமிழ் மணங்கமழும் இசை எல்லாம் இப்போது கேட்கமுடியாது. எங்கும் மேலைத்தேய இசையின் ஆதிக்கம்.

வாழ்த்துக்கள்கூட அந்நிய மொழியில்தான். தமிழ் மொழியை உச்சரித்து 'வணக்கம்' 'நன்றி' 'நல்வரவு' என்ற வார்த்தைகளையெல்லாம் பல வாய்கள் முற்றாக தவிர்த்துக் கொள்கின்றன.

## உடை

தமிழ்ப் பாரம்பரிய உடைகள் மலையேறிவிட்டன. எங்கும் துணிப் பஞ்சம், அடக்கம் என்ற அணிகலமே அடங்கிப் போய்விட்டது. உடைகளில் கிழிசல்களும், பொருத்துக்களும், வெடிப்புக்களுமே நாகரிகமாகிவிட்டன.

சேலை உடுப்பதற்கே பல பெண்களுக்குத் தெரியாது என்றால், எமது உடைக்கலாசாரம் எங்கு போய்விட்டது? வேட்டி கட்டுவதே ஆண்களுக்கு குறிப்பாக இளையோருக்குவெட்கமானசெயல் எனத் தோன்றுகிறது.

இதனால் எமது இனத்தின் அடையாளங்கள் அடங்கிப் போகின்றன. தலையில் பூச்சூடி கால்முட்ட நீளப் பாவாடை அணிந்து அடக்கமாக அழகாக பெண்களைக் காண்பதென்றால் எப்போதாவதொரு திருநாளில ஏங்கேனுமோர் இடத்தில் தான்.

குங்குமப் பொட்டுப் போய் விதவிதமான 'ஸ்டிக்கர்'கள்தான் மங்கையரின் நெற்றிகளில். திருமணத்தின் பின் ஒரு பெண்ணின் செந்தளிப்பைக் குங்குமப் பொட்டல்லவா கூட்டிவிடுகின்றது. ஆம்! அந்தப் பொட்டுக்கூட அருகிக்கொண்டுவருவது வேதனையே.

## சமய பாரம்பரியங்களும் நம்பிக்கைகளும்

சமய நம்பிக்கைகளும்பாரம்பரியங்களும் கேள்விகளுக்குள்ளாக்கப்படுகின்றன. அறிவியல்வளர்ச்சியின் பாதையில் செல்கிறோம் எனச்சொல்லிக் கொண்டு, ஆத்மார்த்தமான கொள்கைகளையும் நம்பிக்கைகளையும்விமர்சித்து மனித நேயக் கட்டமைப்புக்கள் உடைக்கப்படுகின்றன

நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட வேண்டிய வாழ்க்கைப் படிகள், சந்தேகச் சாந்திட்டுக் கட்டப்படுகின்றன. இதனால் மனித நேயம், சமூக விழுமியங்கள் சிதைந்து, மனிதன் தான் போன போக்கில் வாழ ஆரம்பித்து இனக் கட்டமைப்பையும் பாரம் பரியங்களையும் சிதைத்து வாழ்வே கேள்விக் குறியாகின்றது:

## இதற்கென்ன விடை

ஒரு இனத்தின் கலாசாரம் என்பது அந்த இனத்துக்குரிய விசேட அடையாளமாகக் கருதப்படுகின்றது ஒரு இனம் தனக்கெனக் கலாசார கட்டமைப்பை கொண்டிராது விடின் அது தன்னைக் காலப் போக்கில் சிதைவுபடுத்திக் கொள்கின்றது.

எனவே ஒவ்வொரு இனத்துக்கும் ஒரு கலாசார பின்னணி இருக்க வேண்டியது அவசியமே எனவே, எமது தமிழ் கலாசாரமும் கட்டாயம் பேணிப் பாதுகாக்கப்படல் அவசியமே.

ஆனல் கலாசாரக் கட்டமைப்பைப்பேணிக்கொள்ள வேண்டுமென்பதற்காக எதையும் உள்வாங்கக் கூடாது என்பதல்ல.

காலம் வெகு வேகமாக ஓடுகிறது. அந்த ஓட்டத்துக்கேற்ப அயற்சூழலும் நாளுக்கு நாள் மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

ஒரு அங்கி அந்த சூழலுக்கேற்ப தன்னையும் இசைவு படுத்திக் கொண்டாலேயே அது அவ்விடத்தில் நிலைத்து வாழமுடியும்.


அதேபோல் பலமான காற்றை எதிர்க்காது அதன் ஆதிக்கத்தினுள் அடங்கிப் போகாமலும் வளைந்து பின் நிமிர்ந்து நிற்கும் நாணல் போல் நாமும் செயற்படுவதே நன்று.

மேலைத்தேயக் கலாசாரப் புயல் எங்கள் கலாசாரத்தை ஆதிக்கப்படுத்தாமல் பார்பதோடு, தரமானதைத், தகுதியானதை உள்வாங்கிக்கொள்வதில் தவறில்லை.

அதாவது எங்கள் மனங்கள் அதற்குப் பக்குவப்பட வேண்டும். எமது கலாசாரங்களை மேலைநாட்டுக் கலாசார ஆதிக்கத்தால் இழந்துவிடாது காப்பதோடு, கால சூழலுக்கு உட்பட்டு உரிய வகையில் அவற்றை இசைவு படுத்திக் கொள்வதுமே உகந்தது.

எனவே எங்கள் கலாசாரம் எதிர்காலத்தில் எம்மினத்தின் அடையாளமாக இருக்க வேண்டுமாயின் மேலை நாட்டு நாகரிக வலையுள் சிக்குண்டு போகாமல் எமக்கு உகந்தமுறையில்எம கலாசாரத்தைப் பாதுகாக்கவும், மெருகூட்டுவதற்குமாக பயன்படுத்தினால் நமே வற்றி பெறுவோம் எம் கலாசாரத்தைக் காப்போம்!

## தவக்காலச் சிந்தனை - 13



கடவுளின் பார்வையில் நாம் அனைவரும் சமம். தன் நலத்தினைப் பேணிக் காக்க பிறர் நலத்தில் தலையிடுகின்றோம். ''நான்'' என்ற உள்ளுணர்வானது அடுத்தவர்கள் ஒரு சிறு தவறு செய்தாலும் கூட ''குற்றவாளி'' என்ற முத்திரை பொறித்து கூண்டில் ஏற்றி விட்டு கை தட்டி மகிழும். எப்பொழுது நாம் அடுத்தவர்களை மன்னித்து, தீர்ப்புக்குள்ளாக்காமல் ''நாம்'' என்ற அன்புணர்வோடு வாழ முயற்சிக்கின்றோமோ அப்பொழுதுதான் இயேசுவின் மன்னிப்பும், இரக்கமும் நமக்கு நிறைவாய் கிடைக்கும். நம் ஆண்டவர் எங்கேயோ இருந்து கொண்டு நம் வாழ்க்கையைக் கண்ணுற்று கவலைப்படுபவர் அல்லர். மாறாக ''அன்பு, இரக்கம், மன்னிப்பு'' இவற்றை மக்களுக்கு எடுத்துரைக்கும் ஒரு நல்ல ஆசான். அவரைப் பின்பற்றி அவரது போதனைகளைக் கடைப்பிடித்து அவரிலே நாம் சங்கமிப்போம்.

-காவலன்

## 38 சன .ச. நிலையங்களுக்கு உபகரணம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபைத் தலைவரும், மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளருமான அன்ரன் ஜோன்சன் ஜீவா நேற்று மேற்படி பிரதேசத்தினை அண்டிய 38 சன சமூக நிலையங்களுக்கு வேண்டிய விளையாட்டு உபகரணங்களைஅன்பளிப்புச் செய்துள்ளார்.

நேற்று மு ப 10 00 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை அலுவலகத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில், வலி மேற்க்கு பிரதேசசபைத்தலைவர் திரிலோசநாதன் மற்றும் ஈ. பி. டி. பி. காங்கேசன் துறை அமைப்பாளர் சிவகுமார் வேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ)

அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை உடனுக்குடன் செய்து தருபவர்கள்

**நியூ ராதிகாஸ் நகைமாளிகை**

189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(கி/ 1576)

விசேட கொடுப்பனவை வழங்கக்கோரி

# வடக்குகிழக்கு மருத்துவர்கள் நாளை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் பணியாற்றும் சகல வைத்தியர்களுக்கும், விசேட கொடுப்பனவு வழங்கப்படவேண்டுமெனக்கோரி, நாளை வடக்கு கிழக்கு வைத்தியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் தொடர்பாக நேற்று யாழ். அரச வைத்தியர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்; யாழ்ப்பாணத்தில் நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு, அவர்களது சொந்த இடமென்ற காரணத்துக்காக விசேட கொடுப்பனவை வழங்க, சுகாதார அமைச்சு மீண்டும் மறுத்துவிட்டது.

பாரபட்சமின்றி இக்கொடுப்பனவு வடக்கு கிழக்கு வைத்தியர்கள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி நாளை ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் இடம்பெறும்.

எனினும் இவ்வேலைநிறுத்தத்தின் போதும் அவசர உயிர்காப்பு வைத்திய சேவை இடம்பெறும். ஆனால் கிளினிக்குகள், வெளிநோயாளர் பிரிவு வைத்திய சேவைகள் இடம்பெறமாட்டாதெனவும், அதனால் ஏற்படும் சிரமங்களுக்கு தாம் வருந்துவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

எண்ணம்போல வண்ண நகைகளை மங்கையர் மனங்குளிர செய்து பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1575]

## விவசாய உள்ளீடுகள் வழங்கப்படும்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு மற்றும் கல்வியங்காடு கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் , இடம்பெயர்ந்துவாழும் மக்களுக்கு, பட்டினிக்கெதிரான இயக்கம் விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களை இன்று இலவசமாக வழங்கவுள்ளது.

பயனாளிகள் இப்பொருட்களை கல்வியங்காடு, கிராம உத்தியோகஸ்தர் எஸ்.முத்துக்குமாரசாமியின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். [இ]

## போலிநோட்டு 6 பேர்கைது

(கொழும்பு)

ஆயிரம் ரூபா பெறுமதியுடைய போலி நோட்டுக்களை அச்சிட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஆறுபேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் மூன்று லட்ச ரூபா போலி நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் குழியாப்பிட்டியப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர் .ஏச் எஸ் ரணசிங்க தெரிவித்துள்ளர்

(ந-4)

## மகாலிங்கத்தின் மறைவு பேரதிர்ச்சி தருகிறது!

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசசெயலரும் இந்துசமயப் பேரவை உப தலைவரும் ஆ மாலிங்கத்தின் மறைவு ஈழம்வாழ் இந்துக்களுக்கு பேரதிர்ச்சியையும் கவலையையும் தந்துள்ளது.

இவ்வாறு உடுவில், நல்லூர் பிரதேசசெயலர் ஆ. மகாலிங்கத்தின் மறைவுகுறித்து இந்து சமயபபேரவை செயலர் சி சக்திக்கிரீவன் விடுத்தஇரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது: இந்தநாட்டில் தமிழ்இனம் வீரம்மிக்கஇனமாகஅனைத்து உரிமைகளோடும் வாழ வேண்டுமென்பதில் அவரது துணிந்த செயற்பாடுகளுக்கு முழுத்தமிழினமும் அஞ்சலி செலுத்தும் வகையில் அவர் வாழ்வு அமைந்திருந்தது நடைபெற்றுவரும் போரினால் இந்துக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை இவர் வீரத்துடன் எதிர்த்துவந்தார்

அன்னாரது இழப்பினால் துயருறும் குடும்பத்தவருக்கு இந்துசமயப்பேரவை சார்பில் அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கிறோம் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. [வ]

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இன்று வவுனியாவில்மறியல்போர்

(வவுனியா)

அட்டனில் 400ரூபா சம்பள உயர்வு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மலையகத் தோட்டத்தொழிலாளருக்கு ஆதரவு தெரிவித்து ஈ.பி.ஆர் எல.எவ் பெருமாள் அணி இன்று வீதிமறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

வவுனியா மத்திய பஸ் நிலையத்தில்இடம்பெறவுள்ள இந்த வீதி மறியல்போராட்டம் இன்று 11-00 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு வவுனியா மாவட்ட ஈ.பி.ஆர். எல்.எவ் பெருமாள் அணி அமைப்பாளர் சிவம்ஞானதாஸ்அழைப்புவிடுத்துள்ளார் (ம)

மடுவுக்கு பட்டுச் சென்றார்;

இந்தியா செல்லும் ஆயர் அங்கு இந்தியத் தலைவர்களுடன் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பேச உள்ளதாகவும் ஆயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ம)

மகாலிங்கம் . . .

கல்லூரியின் பழையமாணவரான இவர் ஆசிரிய சேவையில் இணைந்து பின்னர் எழுதுவினைஞராகவும் யாழ். கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரியாகவும் நீண்டகாலம் பதவிவகித்தார்;

பி. ஏ. பட்டதாரியான இவர் 1985ல் நிர்வாகசேவையில் சித்தியடைந்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரானார். பின்னர் உடுவில் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய இடங்களில் பிரதேச செயலராகப் பணிபுரிந்துள்ளார்.

லயன்ஸ்கழகம். ஆலய பரிபாலனசபைகள், நாவலர் பணிமன்றம், பண்டிதமணி ஞாபகார்த்தசபை ஆகியவற்றிலும் பொறுப்பான பதவி வகித்துள்ளார். [வ.1

10 அம்சக் கோரிக்கைகளுடன்

## அரச மருத்துவர் சங்கம் அமைச்சரை சந்திக்கும்

(கொழும்பு)

அகில இலங்கை அரசாங்க மருத்துவர் சங்கம் பத்து அம்சக்கோரிக்கையைமுன்வைத்து 14ம் திகதி புதன்கிழமை சுகாதார அமைச்சர் டபிள்யூ. வி. ஜே. செனிவிரத்தினாவுடன்பேச்சுவார்த்தைநடத்தவுள்ளது.

புதன்கிழமை நடைபெறும் இப்பேச்சுவார்த்தையில் மருத்துவர் சங்கத்திற்கும் அமைச்சருக்குமிடையில் இணக்கம் காணப்படாவிட்டால் எதிர்வரும் 20ம் திகதி முதல் தொடர்வேலை நிறுத்தத்தில் சங்கம்குதிக்கப்போவதாக அறிவித்துள்ளது. (ம

மாணவர் தாக்கப்பட்ட விவகாரம்

## அடையாள அணிவகுப்பில் அர்ஜுண ரணதுங்க

இலங்கைக் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுண ரணதுங்க மற்றும் அவரின் சகோதரர் பிரசன்னா ரணதுங்கா உட்பட ஆறுபேர் நாளை மறுதினம் புதன்கிழமை அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படவுள்ளனர்.

தாக்கப்பட்ட அசோக வித்தியாலய மாணவர்கள் இவ்வடையாள அணிவகுப்பின்போது தம்மைத்தாக்கியவர்களை அடையாளம் காட்டுவர்.

இதேவேளை அர்ஜுணவின் சகோதரரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான பிரசன்னா ரணதுங்கா சுகயீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## இருபது வருடத்தின் பின் யாழில் குடிசன மதிப்பீடு

### செயலக அதிகாரி தகவல்

(கோப்பாய்)

இருபது வருடகால இடைவெளியின் பின்னர் இவ்வருட ஜுன் மாதமளவில் குடிசன மதிப்பீட்டு கணக்கெடுப்பு வேலைகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். செயலக புள்ளிவிபர திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இரண்டு கட்டங்களாக இச்செயற்பாடு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முதற் கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே நடைபெற்று முடிந்துவிட்டதாகவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் இடம்பெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-39)

## நோயாளியை உள்ளே அனுமதிப்பதில்தாமதம்!

### பாதுகாப்பு ஊழியர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நோயாளியைக் கூட்டிவந்த ஒருவரால்தாக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக நோயாளியொருவரை ஓட்டோவில் அவசரமாகக் கொண்டு வந்த போது. அந்நோயாளியை உள்ளே அனுமதிப்பதில் தாமதம் காட்டப்பட்டதாகவும் இதனையடுத்து ஏற்பட்ட வாக்குவாதம் உச்சக்கட்டத்தைஅடைந்தபோதுநோயாளியைக் கூட்டிவந்தவரால்பாதுகாப்புஊழியர் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ந-6-124)

அரசும் . . .

துங்கா கேட்டுக்கொண்டதின் பேரிலேயே நோர்வே அரசு இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

நோர்வேயின் இந்த சமாதான முயற்சியானது சம்மந்தப்பட்ட இருசாராரையும் பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதுடன் நின்றுவிடும் இதுவே நோர்வே அரசின் பங்களிப்பாகும்.

பேச்சுக்களின் போதுநோர்வே அரசு இரு பகுதியினருக்கும் எந்த விதமான அழுத்தத்தையும் கொடுக்கமாட்டாது.

இந் நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இருசாராரும் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் தமக்குள்ளேயே பேசி முடிவுஎடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த முடிவில்நோர்வேயின் தலையீடு எந்த வகையிலும் இருக்க மாட்டாது என்றும் நோர்வேத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளதுடன் நோர்வேயின் முயற்சி தொடரும் என்று கூறியுள்ளார். (வ

## தமிழர்க்கு புகழ் சேர்த்த மாமனிதர் எலியஸர் மாரடைப்பால் காலமானார்

(கொழும்பு)

இலங்கை நாட்டிற்கும் ஈழத் தமிழர்க்கும் உலகில் பெருமை தேடித்தந்த கணிதப் பேரறிஞர் கிறிஸ்ரி ஜெயம் எலியேஸர் தனது 83 வது வயதில் கடந்த சனியன்று அவுஸ்திரேலியாவில் மரடைப்பால்மரணமானர்.

1978 இல் விக்ரோறியா இலங்கைத் தமிழ்ச்சங்கத் தலைவராகவும், 1984 இல் அவுஸ்ரேலிய தமிழ்ச்சங்கங்களின். சம்மேளனங்களின்தலைவராகவும் விளங்கியஇவர்தமிழுக்கும் கணிதத்துறைக்கும் புரிந்த தொண்டு உலகம் உள்ளவரை நினைவில் கொள்ளத்தக்கது.

இவரது பணிகளைப் பராட்டி 1996 இல் அவுஸ்திரேலியா அரசு விருதும் 1997 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மாமனிதர் விருதும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

2050ம் ஆண்டில். . .

ளது.

இதேவேளை தற்போது வளர்முக நாடுகளில் ஆயுட்காலம் 63 ஆண்டுகளாகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆயுட்காலம் 75 ஆண்டுகளாகவும் உள்ளதென அம் மதிப்பீடு மேலும் தெரிவித்துள்ளது. (வ)

## சிரமதான நிகழ்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு ஜே.03 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தோமையார் கோவில் வீதியும், சீக்கிரையான் பள்ளம் அ.த. கலவன் பாடசாலை விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் அண்மையில் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. (க-82)

**பாராட்டிவாழ்த்துகிறோம்**

கூட்டுறவுச் சேவையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பணியாற்றி சமூக, சமயத் தொண்டனாக சேவைகள் பல புரிந்த

**சி. புவனேந்திரன்**

அவர்கள் பல்லாண்டுகளாய் நீடூழிவாழ விநாயகப் பெருமான் துணை நிற்க வாழ்த்துகிறோம்.

மு. வாமதேவன் குடும்பத்தினர்.

கோண்டாவல் மேற்கு. (கி-1592)

இப் பத்திரிகை "வலம்புரி" அச் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;